## வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | நாடகமும் அரங்கியலும் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ **இப்பகுதியில் உள்ள 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கான மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. பின்வருவனவற்றில் 'வரை கலை' யாக கொள்ளப்படக்கூடியது
1) நடனம் 2) இசை 3) ஓவியம் 4) இலக்கியம் 5) பேச்சு

02. 'ஆற்றுகைக் கலையின் பண்பு' எனக் கூற முடியாதது
1) ஆற்றுவோனை மூலமாக கொண்டது.
2) உடனடியான எதிர்வினைகளை தோற்றுவிக்கும்.
3) நிகழும் கணத்தே இறந்து போகும்.
4) ஆற்றுவோரிடமிருந்து பெற்று பயன்படுத்தக் கூடியது.
5) பார்ப்போரை உடன் எதிர் கொள்ளும்

03. "தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை" எனக் கூறியவர்
1) குரேசே 2) அரிஸ்ரோட்டில் 3) எறிக் நியூட்டன் 4) ஹெகல் 5) டால்ஸ்ராய்

04. இசை நாடகமரபானது சிங்கள மக்கள் மத்தியில் பின்வருமாறு அழைக்கப்படுகின்றது.
1) ஸ்பெஷல் நாடகம் 2) கொட்டகை நாடகம் 3) நூர்த்தி
4) நாடகம 5) சொக்கரி

05. "பீக்கிங் ஒப்ரோ" எந்த நாட்டுக்குரியது.
1) இத்தாலி 2) சீனா 3) யப்பான் 4) பிரான்ஸ் 5) ஸ்பெயின்

06. 'பலே' வடிவம் தோற்றம் பெற்ற நாடு
1) இத்தாலி 2) பிரான்ஸ் 3) சீனா 4) இந்தியா 5) பிரித்தானியா

07. உலகப் புகழ்பெற்ற 'அன்னத்தடாகம்' (Swan Lake) என்னும் நாடகம் எவ்வகைமை சார்ந்தது?
1) ஒப்பேரா 2) நூர்த்தி 3) பலே 4) கதகளி 5) ரஜடி

08. 'நாடகம் என்பது வாழ்க்கையின் ஒரு துண்டம்' எனக் கூறியவர்
1) அரிஸ்ரோட்டில் 2) ஷேக்ஸ்பியர் 3) ஹொனிக்மன்
4) அபிநவகுப்தர் 5) பேனாட்ஷோ

agaram.lk

09. பின்வருவோரில் ஈழத்தின் வில்லிசைக்கலையுடன் தொடர்புபட்ட கலைஞர்
1) நடிகமணி வைரமுத்து 2) சின்னமணி 3) மௌனகுரு
4) ருக்குமணி அருண்டேல் 5) பாலாமணி அம்மையார்

10. பின்வருவனவற்றில் இன்றியமையாத வகையில் தொழில்நுட்ப சாதனங்களுடன் தொடர்புபடாத கலைவடிவம்
1) சினிமா 2) தொலைக்காட்சி நாடகம் 3) தெருவெளி நாடகம்
4) வானொலி நாடகம் 5) 'அனிமேசன்' திரைப்படம்

11. நாடகக் கலையின் மிகவும் பிரதானமான மூலகம்
1) நாடக எழுத்துரு 2) அரங்கவெளி 3) நடிகன் 4) ஒளிவிதானிப்பு 5) இசை

12. பின்வருவனவற்றில் அரங்கின் காண்பியங்களின் தொகுதி
1) இசை, நடிகன், ஒளி 2) ஒப்பனை, இசை, வேடஉடை
3) வேடமுகம், எழுத்துரு, நடிகன் 4) ஒளி, ஒப்பனை, அரங்க அலங்காரம்
5) நடிகன், வெளி, ஒலி

13. 'ட்றமணன்' Dromnoan என்ற கிரேக்க சொல்லின் கருத்து
1) நாடகம் 2) அரங்கு 3) நிகழ்த்தப்பட்டது 4) நிகழுமிடம் 5) பார்க்கும் இடம்

14. அரங்கில் 'ஒளிவிதானிப்பின்' பணியாக அமையக்கூடிய மிகப்பொருத்தமான கூற்று
1) உணர்வுகளை துல்லியமாக காட்ட உதவும் 2) பாத்திர பண்பை வெளிப்படுத்தும்
3) கதையோட்டத்தினை விளக்கும் 4) நடிகனின் அழகை மேம்படுத்தும்
5) நாடகத்தின் தரத்தினை உயர்த்துகிறது.

15. நடிகனை கதாபாத்திரமாக காண்பிய நிலையில் பண்புமாற்றம் செய்வதற்கு உதவும் அரங்க மூலகங்கள்
1) நடிப்பு, ஒளி 2)வேடஉடை, ஒளிவிதானிப்பு 3) ஒப்பனை, இசை
4) வேடஉடை, ஒப்பனை 5) காட்சிவிதானிப்பு, ஒளிவிதானிப்பு

16. 'உலகின் முதல் நடிகன்' என அழைக்கப்படுபவர்
1) தெஸ்பிஸ் 2) ஷேக்ஸ்பியர் 3) சோபோகிளிஸ் 4) பரதர் 5) சிவாஜி கணேசன்

17. 'டித்றாம்' பாடல்களை இலக்கியமாக தரமுயர்த்தியவர்
1) சோபோகிளிஸ் 2) அரிஸ்ரோட்டில் 3) ஏரியன் 4) ரெறன்ஸ் 5) ஹோமர்

18. 'தெஸ்பியன் வண்டில்' என்ற கலைச் சொல் குறிப்பது
1) தெஸ்பிஸ் இன் சிறப்புக்கள் 2) நடிப்புக் கொள்கைகள் 3) ரஜடியின் இலக்கணம்
4) அரங்கப் பொருட்கள் 5) அரங்க வரலாறு

agaram.lk

19. பின்வருவனவற்றில் 'ஏஸ்கலஸ்' எழுதிய நாடகம்

1) அஜாக்ஸ் 2) அகமெம்னன் 3) எலைக்ரா 4) மீடியா 5) இடிப்பஸ் மன்னன்

20. கிரேக்க அரங்கில் பயன்படுத்தப்பட்ட 'எக்சிக்குளோமா' (EKKYKLEMA) என்னும் அரங்கப் பொறியின் பயன்பாடு

1) காட்சிமாற்றம் 2) பாத்திர வரவு 3) இறந்த உடல் காவி

4) தெய்வங்களை கொண்டு வருதல் 5) ஒலி எழுப்புதல்

21. கிரேக்க 'ரஜடி நாடக மரபில' 'முக்கூட்டு நாடக'ப் பாரம்பரியத்தினை தோற்றுவித்தவர்

1) ஏஸ்கிலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிடீஸ்

4) அரிஸ்ரோபென்ஸ் 5) அகமெம்னன்

22. 'இடிப்பஸ் மன்னன்' நாடகத்துடன் தொடர்புபடுகின்ற மற்றொரு நாடகம்

1) அஜாக்ஸ் 2) மீடியா 3) எலெக்ரா 4) அன்ரிக்கனி 5) அகமெம்னன்

23. கிரேக்க 'திறஜடி' நாடகங்களின் கொடு முடி என்று அழைக்கப்பட்டவர்

1) ஏஸ்கிலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிடீஸ்

4) அரிஸ்ரோபென்ஸ் 5) மெனான்டர்

24. "சமயக் கரணங்கள் நாடக அம்சங்களை கொண்டுள்ளன. இதில் இருந்து 'மக்கள் அரங்கு' தோன்றி இருக்க வேண்டும்" என்று கூறியவர்

1) தொம்சன் 2) றிட்ஜ்வே 3) ஜோண் ஹறீசன்

4) பேரா. சிவத்தம்பி 5) பேரா. சரச்சந்திரா

agaram.lk

25. ஜப்பானில் நாடகத் தோற்றத்துக்கான சடங்கு என நம்பப்படுவது

1) டயோனீசியஸ் சடங்கு 2) ஈஸ்டர் வழிபாடு 3) பாடுகளின் சடங்கு

4) சம்போசா சடங்கு 5) தொவில் சடங்கு

26. றிச்சாட் செக்னர் தமது 'சூழலியல் அரங்கினை' தோற்றுவிக்கப் பயன்படுத்திய சடங்கு

1) ராம் லீலா 2) களகேள்வி 3) டயோனீசியஸ் சடங்கு

4) திருப்பாடுகளின் சடங்கு 5) சம்போஷா சடங்கு

27. பின்வருவனவற்றில் மாதவியின் 11 ஆடல்களில் உட்படாத ஆடல்

1) கொடுகொட்டி 2) அல்லியம் 3) வரிக்கூத்து

4) பாண்டு ரங்கம் 5) குடக்கூத்து

28. திருவெம்பாவையுடன் தொடர்புடையதாக கருதப்படுகின்ற சங்ககால சடங்கு

1) வேலன் வெறியாட்டு 2) களவேள்வி 3) வேட்டுவ வரி

4) தைநீராடல் 5) குன்றக்குரவை

29. சிலப்பதிகாரம் கூறும் அரங்கில் 'கரந்து வரல் எழினி' எனப்படும் திரை

1) ஒருபுறமிருந்து வருவதாகும்
2) இருபுறமும் இருந்து வந்து நடுவில் இணைவதாகும்
3) மேலிருந்து கீழே இறங்குவதாகும்
4) மேடையின் பின்புறம் இருந்து வருவது
5) நிரந்தரமாக தொங்கவிடப்படுவது

30. "இந்த மனிதனின் செய்தியைக் கேளுங்கள் அதைக்கேட்ட பின்பு – புகழ்பூத்த நிமித்தங்களுக்கு என்ன நடந்து விட்டது என்பதைச் சொல்லுங்கள்" என்று கூறும் இடிப்பஸ் மன்னன் நாடகப் பாத்திரம்

1) இடிப்பஸ் 2) கிரையோன் 3) தெய்ரீரியஸ் 4) ஜொகஸ்ரா 5) கோரஸ்

31. இடிப்பஸ் மன்னன் நாடகத்தின் பிரதான 'மோதுகையாக' கொள்ளப்படக் கூடியது

1) இடிப்பஸ்சுக்கும், கிரையோனுக்குமான கருத்து முரண்பாடு.
2) இடிப்பஸ்சுக்கு எதிரான கிரையோனின் சதி.
3) லேயஸ் மன்னனின் இறப்பும், கொலையாளி இனங்காணப்படாமையும்.
4) 'ஸ்பின்கஸ்' அரக்கியின் புதிரும், சாபமும்.
5) தனிமனிதனுக்கும் விதிக்குமான போராட்டம்.

32. 'இடிப்பஸ் மன்னன்' நாடகம் எழுதப்பட்ட காலத்தில் அதில் பிரதான பாத்திரமேற்ற நடிகர்கள் தொகை.

1) 12 2) 03 3) 15 4) 04 5) 05

33. 'கோடை' நாடகம் எழுதப்பட்ட ஆண்டு,

1) 1966 2) 1930 3) 1969 4) 1971 5) 1979

agaram.lk


34. பின்வருவனவற்றில் இலங்கையின் 'வடபுலத்தில்' மட்டும் ஆடப்படும் கூத்து மரபு

1) வடமோடி 2) காத்தவராஜன் 3) மகிடி 4) தென்மோடி 5) வசந்தன்

35. கூத்துக்களை 'பாங்கு' என்ற பெயரில் வகைப்படுத்தி வழங்கும் பிரதேசம்

1) மட்டக்களப்பு 2) யாழ்ப்பாணம் 3) மலையகம் 4) வன்னி 5) மன்னார்

36. அருகிலுள்ள படத்திலே காணப்படும் கிரேக்க நாடக ஆசிரியர்



1) ஏஸ்கிலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிடிஸ்
4) அரிஸ்ரோட்டில் 5) மெனான்டர்

37. இப்படத்தில் காணப்படும் ஆற்றுகைக் கலை வடிவம்



1) ஒப்பேரா 2) கூத்து 3) பலே
4) தெருக்கூத்து 5) கதகளி

38. இதில் காணப்படும் ஈழத்தின் 'பா' நாடக ஆசிரியர்



1) குழந்தை ம.சண்முகலிங்கம் 2) மஹாகவி
3) முருகையன் 4) அம்பி
5) மாவை நித்தியானந்தன்

39. இப்படத்தில் காணப்படும் அரங்கு



1) உரோமைய அரங்கு 2) குளோப் அரங்கு
3) கபுகி அரங்கு 4) கதகளி அரங்கு
5) கிரேக்க அரங்கு

agaram.lk

40. இந் நாடகக்கட்சி இடம் பெறும் நாடகம்



1) கோடை 2) விழிப்பு
3) இராவணேசன் 4) எந்தையும் தாயும்
5) உடையார்மிடுக்கு

(40X1=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **A பிரிவில் இருந்து இரண்டு வினாக்களையும், B பிரிவில் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

## பகுதி - A

*01.*

i) கலை என்றால் என்ன என்பதனை விளக்குக? (3 புள்ளிகள்)

ii) கலை பற்றிய சிந்தனையாளர்கள் இருவரின் எண்ணக்கருத்துக்களை தருக? (4 புள்ளிகள்)

iii) மேலைத்தேய, கீழைத்தேய கலைக்கோட்பாடுகளின் உட்பொருளின் அடிப்படையில் அவற்றினை ஒப்பிடுக? (8 புள்ளிகள்)

*02.*

i) 'நாடகம்', 'அரங்கு', 'ஆற்றுகை' என்ற பதங்களை விளக்குக. (6 புள்ளிகள்)

ii) 'மேடை நாடகத்தினை', வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், என்பவற்றோடு ஒப்பிடுக? (6 புள்ளிகள்)

iii) ஆற்றுகைக் கலை வடிவங்கள் 6 தருக? (3 புள்ளிகள்)

*03.* பின்வருவனவற்றுள் விரும்பிய 3 விடயங்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக?

i) ஒளி ii) வேடஉடை iii) ஒப்பனை iv) காட்சி விதானிப்பு

(3X5=15 புள்ளிகள்)

## பகுதி - B

agaram.lk

*04.*

i) 'சடங்கு' என்றால் என்ன? (3 புள்ளிகள்)

ii) சடங்குகளை தமது அரங்கின் மூலமாக கையாண்ட நான்கு நவீன நாடக நெறியாளர்களின் பெயர் தருக? (4 புள்ளி)

iii) நாடகம், சடங்கு ஆகிய இரண்டும் சமூகத்துடன் தொடர்பு கொள்ளும் முறைமையின் ஒற்றுமைப்பாடுகளை ஆராய்க? (8 புள்ளிகள்)

*05.*

i) இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வரும் பாத்திரங்களின் பெயர்களை தருக. (3 புள்ளிகள்)

ii) இந்நாடகத்தின் பிரதான கருப்பொருள் யாது? (4 புள்ளிகள்)

iii) கிரேக்க 'ரஜடி' நாடக பாரம்பரியத்தின், ஒரு 'மாதிரியாக' (modal) இடிப்பஸ் மன்னன் நாடகத்தினை கொள்ள முடியுமா ஆராய்க? (8 புள்ளிகள்)

*06.*

i) கிரேக்க ரஜடி யின் பரிணாம வளர்ச்சியினை நாடக ஆசிரியர்களின் பங்களிப்பினூடாக சுருக்கமாக விளக்குக? (5 புள்ளிகள்)

ii) தமிழகத்தில் 'அரங்கின்' வளர்ச்சியை, அதன் முக்கிய காலகட்டங்களூடாக நோக்குக. (5 புள்ளிகள்)

iii) 'கூத்து' ஈழத்தமிழர்களின் 'பாரம்பரிய முதுசம்' என்ற பொருளில் கருத்துரைக்குக? (5 புள்ளிகள்)